செ.வெ.எண்.72 நாள் : 22.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் சிங்கராயபுரம் கிராமத்தில் ஜல்லிகட்டு விழாவினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் கொடியசைத்து, உறுதிமொழி ஏற்று துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், சிங்கராயபுரம் கிராமத்தில் தமிழக மக்களின் பாரம்பரியமான ஜல்லிகட்டு விழாவினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், உறுதிமொழியினை ஏற்று, கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில்,ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் கலந்துகொண்டார்.

**இவ்விழாவில், சிறப்பாக மாடு பிடித்த வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழக மக்களின் பாரம்பரியமான ஜல்லிகட்டு விழாவினை மாண்புமிகு புராட்சித்தலைவி **அம்மா** அவர்கள் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்களின் அரசு நம் மக்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிகட்டினை சிறப்பாக கொண்டாடிட ஆணையிட்டதற்கிணங்க, ஜல்லிக்கட்டு விழா **சிங்கராயபுரம்** கிராமத்தில் நடைபெற்றது. இதனை பொதுமக்கள் கண்டு மகிழுமாறும், மாடு பிடி வீரர்கள் மாடு பிடிக்குபோது கவனமாக மாடு பிடிக்கவும், அங்கீகரிக்கப்பட்ட மாடு பிடி வீரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு பின் மாடு பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். மாடு பிடி வீரர்களுக்கு தேவையான மருத்துவ முகாம்கள் மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதிகள், பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, காவல்துறை ஆகிய துறைகள் இணைந்து இவ்விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பொ.சந்திரசேகர், ஒன்றியக்குழுத்தலைவர் மகாலெட்சுமி, மாவட்ட ஊராட்சிக்குழுத் துணைத்தலைவர் அசோகன், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் இராஜேந்திரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் கண்ணன், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் அசோகன், பபிதா, அடைக்கலமேரி, பூவாயி, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.ஹமீதுஅலி, உதவி இயக்குநர் (கால்நடைப்பராமரிப்புத்துறை), கால்நடை உதவி மருத்துவர்கள், ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத்துறை மருத்துவ அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**